**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.1**
**OS.NO. 112 /2019**

NAME : கார்த்திகேயன்

தகப்பனார் பெயர் சொக்கலிங்கம்

**Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of 12.12.2023.**

இருதரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் தற்பொழுது தனியார் கம்பெனியில் ரோல்டுகோல்டு பையராக வேலை பார்த்து வருகிறேன். 2018 ம் ஆண்டு என் அப்பாவினுடைய லாட்ஜ்-ஐ பார்த்துக்கொண்டிருந்தேன். என் அப்பாபெயரிலிருந்து லாட்ஜ் வி.ஐ.டி கல்லூரி எதிரில் உள்ளது. என் அப்பாவிடமிருந்து லாட்ஜ் குத்தகைக்கு (Lease) எடுத்து பார்த்துக்கொண்டிருந்தேன். மாதம் ரூ.25,000/- குத்தகை பணமாக சொத்தின் உரிமையாளரான எனது தந்தைக்கு கொடுக்கவேண்டும். அவ்வாறு குத்தகைக்கு எடுத்து நடத்தின வகையில் எனது ஆண்டு வருமானம் 5 முதல் 6 லட்சமாகும். 2018-ல் இவ்வாறு வருமானம் வந்ததை என்பதை காட்ட ஐ.டி தாக்கல் செய்துள்ளேன்.

இந்த வழக்கில் நான் வருமானவரி செலுத்தியதை சொல்லியிருக்கிறேன். அவ்வாறு வருமானவரி கணக்கை (I.T.returns) இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தேவை என்றால் தாக்கல செய்கிறேன். எந்த வருடத்திலிருந்து நான் வருமானவரி செலுத்துகிறேன் என்றாவல் 2013 லிருந்து செலுத்தி வருகிறேன். என் பிராதில் என் அப்பாவின் சொத்தை பார்த்துக்கொள்கிறேன் என்றும் அதன் மூலம் எனக்கு வருமானம் வருகிறழது என்றும் எனது வருமானவரி செலுத்தி வருகிறேன் என்றும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியிருகிறேன். அந்த லாட்ஜ்-ன் பெயர் பேபி கிருஷ்ணா என்பதாகும்.

லாட்ஜ் வருமானம் மற்றும் அன்றாட நடவடிக்கைகள் குறித்து ஆவணங்கள் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. ஆவணங்கள் இல்லை. பிரதிவாதி ஜெய்சங்கர் என் அப்பாவின் நண்பர். சீனிவாச டிம்பர்டிப், டைல்ஸ் மார்ட் என்ற வியாபார குடியாத்தம், கோபாலபுரதம்தில் செய்துவருகிறார். இந்த வழக்கில் சொல்லப்பட்ட கடன் குறித்து இதன் முன்பு பிரதிவாதி எந்த கடனும் வாங்கவில்லை. இந்த வழக்கில் பிரதிவாதி என்னிடம எவ்வளவு ரூபாய் கடன் வாங்கியதாக போட்டுள்ளேன் என்றால் ரூ.25,00,000/-. அதே 2018-ம் ஆண்டு பிரதிவாதி என் தகப்பனாரிடம் 25 லட்சமும், என் தாயாரிடம் 25 லட்சமும் கடன் பெற்றதாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள விவரம் தெரியும்.

என் தகப்பனாரும், 25 லட்சமும், என் தாயார் 25 லட்சமும் கடன் கொடுத்தது எனக்கு நேரிடையாக தெரியாது. என் தாய் தகப்பனார் தாக்கல் செய்துள்ள வழக்கு பற்றி

விவரங்களதீரகள் என்றால் 25.4.2018 அன்று ரூபாய் 5 லட்சம் பிரதிவாதிக்கு பணம் கடன் கொடுத்தேன். மீதி 4.6.2018 அன்று ஒரு 5 லட்சம் பணம் கடன் கொடுத்தேன். 6.6.2018 அன்று ஒரு 5 லட்சம் பணம் கடன் கொடுத்தேன். 11.6.2018 அன்று ஒரு 5 லட்சம் கொடுத்தேன். 20.6.2018 அன்று ஒரு 5 லட்சம் பணம் கொடுத்தேன். எதற்காக அந்த கடனை பிரதிவாதி வாங்கினார் என்றால் தொழிலுக்கு தேவைப்படுவதாக சொல்லி வாங்கினார். அதற்கு அவர் பிரிண்டட் பாண்டு எழுதிக்கொடுத்து வாங்கினார்.

அந்த பாண்டில் இது மாதிரி தொழில் செய்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளாரா என்றால் இல்லை. அவ்வாறு எழுதிக்கொடுத்த பாண்டுகளில் வெவ்வேறு நபர்கள் சாட்சிகளாக போட்டுள்ளனர். எந்த இடத்தில் வைத்து பணம் கொடுத்தேன் என்றும், எந்த இடத்தில் வைத்து எழுதப்பட்டது என்றால் என்னுடைய வீட்டின் முதல் அறையில் வைத்து பாண்டு எழுதி கையெழுத்து வாங்கிக்கொண்டு பணம் கொடுத்தேன். ஒவ்வொரு கடன் கொடுக்கும்போதும் யார் யார் சாட்சிகளாக இருந்தார்கள் என்றால் 25.4.2018 அன்று முருகேசன், மனோகர் ஆகியோர் சாட்சிகளாக இருந்தனர். 4.6.2018 அன்று முருகன், கோபி ஆகியோர் சாட்சிகளாக இருந்தனர். 6.6.2018 அன்று முருகன், கோபி ஆகியோர் சாட்சிகளாக இருந்தனர்.11.6.2018 அன்று பூபதி, விஜயன் ஆகியோர் சாட்சிகளாக இருந்தனர். 20.6.2018 அன்று பூபதி, விஜயன் ஆகியோர் சாட்சிகளாக இருந்தனர்.

இந்த பாண்டுகள் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் அனைத்தும் என் வீட்டில் வைத்து எழுதப்பட்டது. முதலில் எழுதும்போது தியாகராஜன் என்பவர் எழுதினார். அதற்கு அடுத்த பாண்டும் தியாகராஜன் எழுதினார். சாட்சிகளில் பத்திரம் எழுதக்கூடியவர் யார் என்றால் சாட்சிகளில் பத்திரம் எழுதியவர் யாரும் இல்லை.

தியாகராஜன் என்பவர் பத்திரம் எழுதக்கூடியவர் அவர் எங்கு பத்திரம் எழுதுகிறார் என்று எனக்கு தெரியாது. பத்திரம் எழுதக்கூடியவர் என்று அழைத்து வந்தார்கள். இந்த ஒவ்வொரு பாண்டும் எந்த நேரத்தில் எழுதப்பட்டது என்றால் மேற்சொன்ன பாண்டுகள் அனைத்தும் காலை 10 முதல் 11 -க்குள் எழுதப்பட்டது. இந்த கடன்களை எல்லாம் அவர் கேட்டவுடன் கொடுத்துவிட்டேனா அல்லது எப்போது கொடுத்தேன் என்றால் முதலில் என் அப்பாவிடம் கேட்டார் அடுத்தது என்னிடம் தனிப்பட்ட முறையில் கேட்டார். கேட்கும்போது என் அப்பாவை கன்சல் செய்து சொல்கிறேன் என்று சொன்னேன். இந்த விவரங்கள் எல்லாம் பிரதிவாதி நேரிடையாகத்தான் பேசினார்.

என் அப்பா முதலில் என் மகனை கேட்டு சொல்கிறேன் என்று சொல்லியுள்ளார். என் அப்பா சொல்லித்தான் இந்த பணத்தைக்கொடுத்தேன் என்றால் ஆமாம். என் அப்பாவை கேட்டுவிட்டுத்தான் கொடுத்தேன். 20.6.2018 அன்று கடன் கொடுக்கும்போது அந்த இடத்தில் யார்,யார் இருந்தது என்றால பூபதி, விஜயன் ஆகிய சாட்சிகள் இருந்தனர் மேலும் என் அப்பாவும் இருந்தார் மற்றும் பத்திரம் எழுதிய அருண்குமாரும் இருந்தார். அருண்குமார் பத்திரம் எழுதும் தொழில் செய்பவரா என்று எனக்கு தெரியாது. சாட்சிகள் இருவரும் குடியாத்தம். பூபதி என்பவர் நெல்லூர்பேட்டை, விஜயன் டிப்போ.

இந்த சாட்சிகள் இருவரும் என் தகப்பனாருக்கு தெரிந்தவர் என்றால் சரிதான். 25.4.2018 அன்று கடன் கொடுத்ததாக சொல்லும்போது யார் இருந்தார்கள் என்றால் முருகேசன் மற்றும் மனோகரன் மற்றும் தியாகராஜன், எனது அப்பா ஆகியோர்கள் இருந்தார்கள். முருகேசன், மனோகரன் என் அப்பாவிற்கு தெரிந்தவர் தான். தியாகராஜன் என் அப்பாவிற்கு தெரியாது. தியாகராஜன் எந்த ஊர் என்று தெரியாது.

(வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதிற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI Digitally signed by G SANTHI

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.